TAMILTH Salem 1 Regional_04 214344
2006-2017 Kasturi & Sons Ltd. -Najeem -andheen@gmail.com -9994265716



சனி - ஞாயிறு

# சாதனை முகங்கள்!

# உழைப்பும் இறையருளுமே வெற்றியைத் தரும்!

கொங்கே முழங்கு..! நம்மூரு சேதி நாலூருக்கும் கேக்கட்டும்...



## ஆர்.வி.எஸ். கல்விக் குழுமத் தலைவர் கே.வி.குப்புசாமி

ஆர்.கிருஷ்ணகுமார்

வேட்டை சுமந்து முதலாளியாய் ஆனவர்களை திரைப்படங்களில் பார்த்திருக்கிறோம். கதைகளில் படித்திருக்கிறோம். உண்மையிலேயே உழைப்பை சுவாசமாய்க் கருதி வாழும் மனிதரைப் பற்றி அறிய வேண்டுமா? பல லட்சம் மாணவர்களின் கல்விக் கண்ணைத் திறந்துள்ள ஆர்.வி.எஸ். கல்விக் குழுமங்களின் தலைவர் கே.வி.குப்புசாமிதான் அவர். கோவை சூலூரின் அடையாளங்கள் இரண்டு. அங்குள்ள விமானப் படைத் தளமும், ஆர்.வி.எஸ். நிறுவனங்களும்தான். ஏறத்தாழ 100 கல்வி நிறுவனங்களின் தலைவர், அரிசி மில், நூற்பாலை என தொழில் சாம்ராஜ்ஜியத்தின் அடையாளம் எனக் கேள்விப்பட்டு அவரைத் தேடிச் சென்றபோது, நெற்றி நிறைய விபூதியும், சாதாரண வெள்ளை வேஷ்டி-சட்டையுடன் காட்சியளித்த அவரா கே.வி.கே. என அழைக்கப்படும் கே.வி. குப்புசாமி? என திகைத்துப் போனோம்.

இன்முகத்துடன் இரு கை கூப்பி வரவேற்ற அவர், "முதல்ல சாப்பிடுங்க; அப்புறம் பேசலாம்" என்றார் வாஞ்சையுடன். "பெரிய நிறுவனத்தோட தலைவர், இப்படி சாதாரணமா இருக்கீங்களே?" என்று கேட்டதற்கு சிரித்துக்கொண்டே "நான் செஞ்சேன்னு சொல்ல ஒன்னுமே இல்லீங்க! எல்லாமே இறையருள்தான். நம்ம அந்தஸ்து, தகுதி, பட்டம், பதவியெல்லாம் யாரு கொடுத்தது? உழைப்புதானுங்க. உழைக்காம இருந்தா வளர்ச்சி இல்ல. நான் மட்டும் உழைக்கலீங்க, பல்லாயிரக்கணக்கானவங்களோட உழைப்புதான் இந்த தகுதிய தக்க வெச்சிருக்கு. உழைப்பும், கடவுளோட கருணையும் மட்டும்தான் நம்மள உயர்த்தும்" என்றார் வெள்ளந்தியாய்.

"எங்க அப்பா கே.பி.வெங்கடாசலத்தோட ஊரு காடம்பாடி. ஆனா, 1942 செப்டம்பர் 11-ம் தேதி நான் பொறந்தது அம்மா மருதம்மாளோட ஊரு முதலிபாளையம். எனக்கு முன்னாடி ஒரு பொண்ணு, பையன் பிறந்து இறந்துட்டாங்க. அதனால, வரம் வாங்கி பொறந்த பையன்னு என்ன சொல்லுவாங்க. முதலிபாளையத்துல நான் 5-வது வரைக்கும் படிச்சேன். எலந்த மரத்துக்கு அடியிலதான் வகுப்பு நடக்கும். புளியம்பழத்தோட ஓட்ட கையில மாட்டிக்கிட்டு, அ, ஆ, இ, ஈ... எழுதிப் பழகினேன். அதுக்கப்புறம் சூலூர்ல 10-ம் வகுப்பு வரைக்கும் படிச்சேன்.

### கடன் சுமையுடன் தந்தை

எங்கப்பா, எங்க பெரியப்பாவோட சேர்ந்து ரைஸ் மில், ஜின்னிங் ஃபேக்டரி நடத்தி வந்தாரு. ஒரு பிரச்சினையில அப்பாவ ரூ.12,000 கடனோட வெளியில அனுப்பிட்டாரு பெரியப்பா. இடிஞ்சிபோய் உட்கார்ந்த அப்பாவுக்கு ஆறுதல் சொன்னேன். அம்மாவோட அப்பா மாரப்ப செட்டியார அணுகினப்ப, ரூ.15000 கொடுத்தாரு. அதில ஒன்றரை ஏக்கர் நிலம் வாங்கி, அரிசி ஆலை தொடங்கினோம். அங்க, மூட்ட தூக்குறது, கூட்டறது, லோடு ஏத்தறது, காவல் காக்கறதுன்னு எல்லா வேலையும் செஞ்சேன். கொஞ்சம் கொஞ்சமா அரிசி ஆலை வளந்துச்சு. 60 மூட்ட அரச்ச ஆலை, 1000 மூட்ட அரைக்குற அளவுக்கு பெரிசாச்சு. நானும் வெளி உலகத்துக்குப் போக ஆரம்பிச்சேன். விசைத்தறிக் கூடம், ஜின்னிங் ஃபேக்டரினு வளர ஆரம்பிச்சோம். 1966-ல பத்மாவதியோட கல்யாணமாச்சு. அவங்க பெரிய குடும்பம். அந்த மகாலட்சுமி எங்க வீட்டுக்கு வந்தப்புறம்தான், எங்க வளர்ச்சியே!

### வெறுங்கையுடன் வெளியேறிய கே.வி.கே.

1967 அக்டோபர் மாசம் எங்களுக்குப் பையன் பொறந்தான். ரத்தினவேல் சுப்பிரமணியம்னு முருகனோட பேர வெச்சோம். சூலூர் விமானப்படைத் தளத்துல எனக்கு நிறைய நண்பர்கள் உண்டு. அதேமாதிரி, வெளியிலவும் நிறைய நண்பர்கள் கிடச்சாங்க. இந்த நிலையில, 1972-ல திடீர்னு எங்க அப்பா, என்ன வீட்ட விட்டு வெளியில அனுப்பிட்டாரு. நானும், அப்பாவும் நேரடியாக பேசிக்க மாட்டோம். அவரோட நண்பர்கள் மூலம்தான் பேசிக்குவோம். `குப்புசாமிய வெளியில போகச் சொல்லு. அவன் சந்தோஷமா இருப்பான்'னு சொல்லிட்டாரு. கையில ஒண்ணுமில்ல. அப்ப, மனைவியோட உண்டியல்ல இருந்த ரூ.300 எடுத்துக்கிட்டு, ரூ.25 வாடகைல ஒரு வீட்டைப் புடுச்சோம். பாய், தலகாணி வாங்கிக்கிட்டு, பழைய சேலைய போத்திக்கிட்டு முதல் நாள் தூங்கினோம். அடுத்த நாள் நண்பர்கள் தேடி வந்துட்டாங்க. கொஞ்சம் பணமும் கிடச்சது. வீட்டுக்குத் தேவையான பீரோ, கட்டில், டேபிள், சேர், பாத்திரங்கனு எல்லாம் வாங்கினோம். அப்பல்லாம், உற்பத்தியாகிற நூல அரசாங்கத்துக்கு தந்துடணும். டெக்ஸ்டைல் ஃபேக்டரிங்களுக்கு அரசாங்கம் நூலைப் பிரிச்சித் தரும். எங்கிட்ட லைசென்ஸ் இருந்ததால, நூல் அலாட்மென்ட் கிடச்சது. அப்பாவோட ஃபேக்டரிக்கு கொடுத்ததுபோக, மீதமுள்ள நூல வித்தேன். நல்ல வரும்படி கிடச்சது. கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கூடத்துல ரத்தினவேல் சுப்பிரமணியத்தை சேர்த்தேன்.

### தெய்வமாக மாறிய மகன்

1972 ஜூலை 15-ம் தேதி அவனுக்கு நாலரை வயசு. நான்தான் அவனுக்கு பல் தேய்ச்சிவிட்டு, குளிக்க வெச்சேன். அப்புறம் அம்மாகிட்டபோய் துணி மாத்திக்கிட்டு, பசிக்குதுன்னு சொல்லியிருக்கான். ஹார்லிக்ஸ் போட்டுத்தரேன்னு பத்மாவதி சொல்லியிருக்காங்க. அப்ப, ஹார்லிக்ஸ் பாட்டில் எடுத்துக்கிட்டு வந்த ரத்தினவேல் சுப்பிரமணியம், திடீர்னு கீழே விழுந்தான். பாட்டில் உடைஞ்சி, அதுமேலேயே விழுந்ததுல, சில நொடியில ரத்தம் முழுக்க வெளியேறி, இறந்துட்டான். வாழ்க்கையே இடிஞ்சிபோன மாதிரி ஆயிடுச்சி. நாங்க ரெண்டு பேரும் ஒரு வாரம் சாப்பிடல. பத்மாவதியோட அண்ணன் சுப்பிரமணியம்தான் எங்களுக்குப் பெரிய ஆறுதலா இருந்தாரு. அப்பறம் கொஞ்சம் கொஞ்சமா மீளத் தொடங்கினோம். 1972-ல் மகள் மரகதமணி, 1974-ல் மகன் செந்தில்கணேஷ் பிறந்த பின்னர்தான், எங்கள் வாழ்வில் மீண்டும் வசந்தம் வீசத் தொடங்கியது. பழைய சோகத்துல இருந்து மீண்டோம்.

இதுக்கு நடுவுல, அப்பா தொழில் நஷ்டமடைந்து, கடனாளியாக மாறினாரு. சொந்தக்காரங்க சேர்ந்து எங்கிட்ட வந்து, அப்பா தொழில எடுத்து நடத்த சொன்னாங்க. அதனால அப்பா பாத்துக்கிட்டிருந்த டெக்ஸ்டைல் மில்ல நான் எடுத்து, டெவலப் செஞ்சேன். எல்லாருக்கும் முன்னாலயே என் கையப் பிடிச்சுக்கிட்டு, `உன்னய கஷ்டப்படுத்திட்டேன். நீ ரொம்ப பெரிய மனுஷன்னு'னு சொல்லி, எங்கிட்ட மன்னிப்பு கேட்டாரு. `விடுங்கப்பா, நீங்க ஒண்ணும் செய்யல. எல்லாம் நேரம் 'னு சொன்னேன். தாத்தா நஞ்சப்ப செட்டியார், தாய் மாமன் அருணாசலம் செட்டியார், நண்பர் நரசீதுளசிதாஸ் எல்லாம் என்னோட தொழில் வளர்ச்சிக்கு ரொம்ப உதவினாங்க.

### திண்டுக்கல்லில் டெக்ஸ்டைல் மில்

சூலூர்ல ஸ்பின்னிங் மில், டெக்ஸ்டைல் மில் நடத்தினதுல, நல்ல வருவாய் கிடச்சது. அப்புறம், வெளியூர்ல மில் அமைக்கலாம்னு முயற்சி செஞ்சேன். காரைக்குடி தேவகோட்டைக்குப் போய் நெலம் பாத்தோம். அப்பத்தான், பின்தங்கிய பகுதியில தொழில் தொடங்கினா, சலுகைகள் கிடைக்கும்னு அரசு அறிவிச்சிருந்தது. காலைல பேப்பர் படிச்சப்ப, வேடச்சந்தூர் தாலுகாவை பின்தங்கிய பகுதியா அறிவிச்சிருந்தது தெரியவந்தது. உடனே அங்கிருந்து கார்ல கரூர் வழியாக திண்டுக்கல் புறப்பட்டோம். திண்டுக்கல் பக்கத்துல ஏக்கர் ரூ.5000-னு விலை பேசி, 30 ஏக்கர் வாங்கினேன்.

1972-ல மகன் செத்ததுல இருந்து, பத்மாவதி தினமும் அழுதுக்கிட்டே இருப்பாங்க. ஒரு கட்டத்துல அந்த வீடு வேண்டாம், வேற வீட்டுக்குப் போயிடுவோம்னு சொன்னாங்க. அப்ப, சூலூர்ல 7 ஏக்கர் நிலம் வாங்கி, குடோனோட வீடு கட்டினேன். சூலூர் டெக்ஸ்டைல் மில்ல திண்டுக்கல்லுக்கு மாத்தி, எம்.பி. டெக்ஸ்டைல், நஞ்சப்பா டெக்ஸ்டைல்ஸ்-ங்கற பெயர்ல நடத்தினேன். 35 ஆயிரம் ஸ்பிண்டல், 7500 தொழிலாளர்கள்னு தொழில் பெரிசா வளர்ந்தது.

நான் நூற்பாலை தொடங்கினதுக்கு அப்புறம் நிறைய நூற்பாலைகள் வந்துச்சு. அந்தப் பகுதியே டெக்ஸ்டைல்ஸ் மையமா மாறுச்சு. மிகப் பெரிய குழுமங்கள் டெக்ஸ்டைல் மில்ஸ் நடத்திக்கிட்டிருந்த காலத்துல, தனி ஆளா டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரீல சாதிச்சது நான் மட்டும்தான்னு பலரும் சொன்னாங்க. இதுக்கு நடுவுல, ஹாலோ பிளாக் கற்கள் உற்பத்தி செய்யும் `பத்மா ஹாலோ பிரிக்ஸ்` தொழிற்சாலையையும் தொடங்கினேன். அப்புறம் அதை இன்னொருத்தர்கிட்ட கொடுத்துட்டேன்.

### கல்வி அறக்கட்டளை தொடக்கம்

எங்கள தவிக்க விட்டுட்டு, குலசாமியா மாறிட்ட ரத்தினவேல் சுப்பிரமணியம் பேர்ல ஏதாவது செய்யனுமுன்னு நெனச்சிக்கிட்டே இருந்தோம். அப்ப, வட்டார வளர்ச்சி அலுவலராக இருந்த நாகலிங்கம், ரத்தினவேல் சுப்பிரமணியம் பேர்ல கல்வி அறக்கட்டளை தொடங்கலாமுன்னு சொன்னாரு. அதனால, 1983-ல் ரத்தினவேல் சுப்பிரமணியம் கல்வி அறக்கட்டளையை பதிவு செஞ்சோம். இந்த சூழ்நிலையில, தனியாரும் கல்லூரி தொடங்கலாம்னு, அப்ப தமிழக முதல்வரா இருந்த எம்ஜிஆர் உத்தரவிட்டார். உடனே, பாலிடெக்னிக் நடத்த அனுமதி கேட்டு, அப்ப கல்வி அமைச்சரா இருந்த அரங்கநாயகத்துக்கு விண்ணப்பிச்சோம். அப்புறம் சென்னைக்குப் போய் அவரை நேரில் பார்த்தேன். ஏற்கெனவே அவருகூட அறிமுகம் உண்டு. ஒரே நாள்ல எனக்கு பாலிடெக்னிக் அங்கீகாரம் கெடச்சது. இதுக்காக ஒரு பைசாகூட நான் செலவு பண்ணல.

### மகா பெரியவரின் ஆசி...

அப்ப, ஆந்திராவுல நடைபயணம் மேற்கொண்டிருந்த மகா பெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், சித்தூர்ல இருக்கறதா தகவல் கெடச்சது. உடனே, நானும், பத்மாவதியும் சித்தூர் போய், அவர்கிட்ட பாலிடெக்னிக் ஆர்டர் காப்பிய கொடுத்து, ஆசிர்வாதம் வாங்கினோம். `மடத்துக்குச் சொந்தமா 100 ஏக்கர் நிலம் இருக்கு. போய் பாருங்க. பிடிச்சிருந்தா அத பயன்படுத்திக் கொள்ளுங்க'னு சொன்னார் மகா பெரியவர். அவர் சொன்ன இடத்துக்குப் போனோம். ஆனால், பாதை வசதி இல்லாததால, அந்த இடத்தைப் பயன்படுத்த முடியல. இதையும் மகா பெரியவர்கிட்ட சொல்லிட்டோம். அப்புறம் திண்டுக்கல் டெக்ஸ்டைல் மில்லுக்குப் பக்கத்திலேயே நிலம் வாங்கி, மகன் ரத்தினவேல் சுப்பிரமணியம் பேர்ல ஆர்.வி.எஸ். பாலிடெக்னிக்கை தொடங்கினோம். முதல் வருஷமே ஏழை மாணவர்கள் 50 பேருக்கு இலவசமா இடம் கொடுத்தோம். அங்கிருந்த ஹாலோ பிளாக் கற்களைப் பயன்படுத்தி, உடனடியாக கட்டிடமும் கட்டினோம். பாலிடெக்னிக் நல்ல முறையில் செயல்படத் தொடங்கியது" என்று கல்விச் சேவை தொடங்கிய வரலாற்றை பெருமிதத்துடன் விவரித்தார் கே.வி. குப்புசாமி.

சரி, தெய்வமாய் மாறிய மகன் பெயரில் ஒரு பாலிடெக்னிக் தொடங்கியாயிற்று, அந்த ஒரு நிறுவனம் எப்படி 100 நிறுவனங்களாய் மாறியது?

**இடைவேளை... நாளை வரை...**

### கொங்கு சாம்ராஜ்யங்கள் வேர் விட்ட கதை

தொடர்புக்கு
samrajiyam.k@thehindutamil.co.in



### எல்லோரையும் சமமாகப் பாவிக்கும் அப்பா...

கே.வி.குப்புசாமியின் மகன் செந்தில்கணேஷ். அமெரிக்காவில் பிபிஏ, எம்பிஏ-வும், லண்டனில் எம்.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸும் படித்துள்ள இவர், அங்கு ஒரு தொழிலும் நடத்தியுள்ளார். பின்னர் இந்தியா திரும்பிய செந்தில்கணேஷ், ஆர்விஎஸ் கலை, அறிவியல் கல்லூரி உள்ளிட்ட கல்வி நிறுவனங்களின் நிர்வாக இயக்குநராகப் பொறுப்பு வகிக்கிறார். "சிறு வயதில் இருந்தே அப்பாதான் எங்களுக்கு இன்ஸ்பிரேஷன். அவரது கடின உழைப்பும், விடாமுயற்சியும் இப்போதும் பிரமிக்க வைக்கிறது. நான் உட்பட எத்தனையோ பேருக்கு அவர் வழிகாட்டி. சக மனிதர்களை அவர் அணுகும்விதமே அலாதியானது. சிக்கலான சூழ்நிலைகளை எளிதாக கையாள்வார். எல்லோருடைய கருத்துகளையும் கேட்பார். அதேசமயம், இலக்கை அடைவதில், எந்தக் குறுக்கீடும் இல்லாமல் பார்த்துக்கொள்வார். மிகப் பெரிய பொறுப்பில் இருப்பவர்கள் முதல், கடைநிலைத் தொழிலாளி வரை சமமாகப் பாவித்து, விருந்தோம்பல் செய்வார். சாதாரண தொழிலாளியிடமும், கொங்குத் தமிழில் அன்புடன் நலம் விசாரிப்பார். எல்லோரிடமும் மிகுந்த மரியாதையுடன் பழகுவார். பல விஷயங்களை நான் அவரிடமிருந்துதான் கற்றுக்கொண்டேன். ஆர்.வி.எஸ். குழும வளர்ச்சி அப்பா என்ற தனி மனிதரால் ஏற்பட்டது என்றால் அது மிகையில்லை" என்று நெகிழ்கிறார் செந்தில்கணேஷ்.

Order Licensed Version to Remove Watermark



▲ ரத்தினவேல் சுப்பிரமணியம்

### தொழில் நேர்த்தியும், நேர்மையும்...

கல்விக் துறையில் கே.பி.குப்புசாமி காலடியெடுத்து வைக்கும்போது வயது 42. அடுத்தடுத்து புதிய கல்லூரிகள். "இது எப்படி சாத்தியமானது?" என்று கேட்டோம். "எதைச் செய்தாலும் அதை நேர்த்தியாக, நேர்மையாக செய்ய வேண்டும். செய்யும் வேலையை நேசிக்க வேண்டும். சரிவர கடமையைச் செய்பவர்களுக்கு நிச்சயம் பலனுண்டு. இதுதான் வெற்றியின் ரகசியம். இந்த வழிமுறை எல்லோருக்கும் சாத்தியமே! வணிகம் செய்யும்போதும் சரி, அரைவை ஆலை, பஞ்சாலை நடத்தும்போதும் சரி, ஒவ்வொரு அடியையும் கவனமாக வைப்பேன். இதனால், எந்தத் தொழிலிலும நஷ்டமோ, இழப்போ சிந்தித்ததில்லை. நடைமுறைச் சிக்கல்கள், பண நெருக்கடி இருக்கும். ஆனால், இடிந்துபோய் அமர்ந்ததில்லை. நேர்மையை மூச்சாக கருதினேன். தடம் மாறியிருந்தாலோ, தடுமாறியிருந்தாலோ எப்போதோ காணாமல்போயிருப்பேன். இந்த குணம், எனது பள்ளி ஆசிரியர்களால் நெறிப்படுத்தப்பட்டது. தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் மட்டுமல்ல, கடவுளும் என்னைக் கைவிடவில்லை" என்றார் கே.வி. கே. உறுதியுடன்.



▲ மனைவி பத்மாவதியுடன், கே.வி.குப்புசாமி.